2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதுவும் பதிவாகிவிட்டது.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *நானும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு அளித்திருந்தேன். 'கஞ்சா வியாபாரிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம்' என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாணியம்பாடி காவல் ஆய்வாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கஞ்சா வியாபாரியைப் பற்றி தகவல் கொடுத்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *அதேபோன்று, பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தில் உள்ள அவருடைய மனைவிக்கு வேலைவாய்ப்பும், இழப்பீடும் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(ஊ) கட்சி நிர்வாகி இல்லத் திருமணம், கொடிக்கம்பம் நடும்போது இறந்த சிறுவன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்கு முன்பாக அவையிலிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்சியினுடைய நிருவாகியின் இல்லத் திருமணத்திற்குச் சென்றபோது 13 வயது சிறுவன் கொடிக் கம்பம் நடும்போது இறந்திருக்கிறார். அதற்காக அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) கல்விக் கடன் இரத்து, அரசு நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. *பதிவு செய்துவிட்டீர்கள், நன்றி. பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு வரியில் சொல்லுங்கள்.*